**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025–ம் ஆண்டு ஜூன் மாதம் 4–ம் நாள் புதன் கிழமை

**I.A.No.3/2025 /in/ O.S.No.156 /2022**
(Original Suit CNR No. TNTH06-000-231-2022)

R. முருகானந்தன் :: மனுதாரர் / வாதி

**/எதிர்/**

1. ரெங்கசாமி என்ற பாண்டியர்
2. பெரிய ஜக்கம்மாள்
3. திருமலைராஜ் என்ற உமாசங்கர்
4. சாலினி
5. கார்த்திகேயன்

:: எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

---------

இம்மனுவானது 28.04.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.A.காந்தன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் பதிலுரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

C.Rajasekar, B.A., B.L.,
Digitally signed by C.Rajasekar, B.A., B.L.,
Date: 2025.06.04 16:35:34 +0300

2) **<u>மனுதாரர் / வாதி தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்.</u>**

அசல் வழக்கின் பிரதிவாதிகள் பல பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்திருப்பதாகவும், அதற்கான பதில் உரையை மனுதாரர்/ வாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்திருப்பதாகவும், அதனை அனுமதித்து ஏற்கும்படி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் தரப்பு மனு உரை கோரிக்கை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என்றும், அசல் வழக்குரைக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருப்பதாகவும், அதுகுறித்து மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தங்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியமாக இருப்பதாகவும், எனவே கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

5) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் , சான்றாவணங்கள் இல்லை.

6) **<u>பிரச்னைக்கான தீர்வு:</u>**

06-01) மனுதாரர் தரப்பு மனுவுரையில் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைக்காக பதில் உரை தாக்கல் செய்வதை அனுமதித்து ஏற்குமாறு இம்மனுவில் வேண்டப்பட்டுள்ளது.

06-02) இதுகுறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையில், அவ்வாறு எதிர்வழக்குரைக்கு பதிலுரை தாக்கல் செய்திருப்பதை ஏற்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கும் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

C.Rajasekar, B.A., B.L.,
Digitally signed by C.Rajasekar, B.A., B.L.,
Date: 2025.06.04 16:35:41 +0300

06–03) இந்நிலையில், வாதி தரப்பு பதிலுரையில், வழக்குரை சங்கதிக்கு முரணான சங்கதிகள் குறிப்பிடப்பட்டிருப்பதாகவோ அல்லது புதிய வழக்கு மூலங்களை குறிப்பிட்டு பதிலுரை தாக்கல் செய்திருப்பதாகவோ குறிப்பான எதிர்வாதம் எதுவும் இம்மனுவின் எதிர்உரையில் எதிர்மனுதாரர்களால் முன்னெடுக்கவில்லை. மாறாக, தங்களுக்கும் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதியளிக்கும்படி மட்டுமே வேண்டப்பட்டுள்ளது.

06–04) இந்நிலையில், மேற்படி மனு உரை மற்றும் விவாதங்களின் அடிப்படையில் பரிசீலிக்கையில், மனுதாரர் தரப்பு பதில் உரையில் பிரதிவாதிகள் தரப்பு எதிர் வழக்குரை சங்கதிகளை ஒவ்வொன்றாக குறிப்பிட்டு கூறி விளக்கம் அளித்திருப்பதை அறிய முடிகிறது. மேற்படி பதிலுரையில் புதிய வழக்கு மூலங்கள் எதுவும் குறிப்பிடப்பட்டிருப்பதாக பிரதிவாதிகள் தரப்பிலும் தெரிவிக்கப்படவில்லை. இவ்வாறான சூழலில் வாதி அசல் வழக்கில் தனது தரப்பு வழக்குரை விவரங்களை மற்றும் பதிலுரை விவரங்களை முழுமையாக தெரிவிப்பதால் அசல் வழக்கில் முழுமையான மற்றும் அறுதியான தீர்வு எட்ட வாய்ப்பாக அமையும் என்பதுடன் பலதரப்பட்ட நடவடிக்கை பெருக்கத்தை தவிர்க்கவும் உதவிகரமாக இருக்கும் என்பதாலும், இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

06–05) அதேவேளையில், இந்த பதிலுரைக்கு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பிரதிவாதிகள் தரப்பில் விரும்பும்பட்சத்தில் அத்தகைய கூடுதல் எதிர்வழக்குரையை உரிய அனுமதி கோரும் மனுவுடன் தாக்கல் செய்யும் பட்சத்திலேயே அத்தகைய கூடுதல் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்புடையவையா ? என்பதை பரிசீலித்து அதன் அடிப்படையிலேயே அத்தகைய கோரிக்கையை அனுமதிக்க இயலுமா ? இயலாதா ? என்பதை தீர்மானிக்க இயலும். எனவே, இம்மனுவின் மனுஉரையில் வேண்டப்பட்டுள்ள பரிகாரம் வழங்கத்தக்கதா ? இல்லையா ? என்பதையே தீர்மானிக்க இயலும் என்ற நிலையில், எதிர்மனுஉரையில் வேண்டப்பட்டுள்ள பரிகாரத்தை இம்மனுவில் வழங்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

C.Rajasekar, B.A., B.L.,
Digitally signed by C.Rajasekar, B.A., B.L.,
Date: 2025.06.04 16:35:49 +0300

06-06) முடிவாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய விரும்பும் பட்சத்தில் கூடுதல் எதிர்வழக்குரையுடன் உரிய முறையில் அனுமதி கோரும் மனு தாக்கல் செய்து உரிய பரிகாரம் பெற்றுக் கொள்ள எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு உள்ளது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேற்படி விவாதத்தின்படி இம்மனுவினை அனுமதித்திட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7)** இறுதியாக,

| | |
|---|---|
| 1. | இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 04.06.2025-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

C.Rajasekar, B.A., B.L., Digitally signed by C.Rajasekar, B.A., B.L., Date: 2025.06.04 16:35:58 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை.</u>**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை.</u>**

C.Rajasekar, B.A., B.L., Digitally signed by C.Rajasekar, B.A., B.L., Date: 2025.06.04 16:36:05 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

IA 3/2025
in
O.S. 156/2022
FAIR / DRAFT ORDER
Date : 04.06.2025

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் நாள் புதன் கிழமை

**I.A.No.3/2025 /in/ O.S.No.156 /2022**
(Original Suit CNR No. TNTH06-000-231-2022)

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், தெலுங்கு செட்டியார் தெரு, கதவு எண்.9-4-51 என்ற முகவரியில் குடியிருக்கும் ராஸ்அழகர்சாமி கவுடர் குமாரர் இந்து ஆசிரியர் உத்தியோகம் சுமார் 57 வயதுள்ள R.முருகானந்தன். |

.... மனுதாரர் / வாதி

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், திருவள்ளுவர் தெருவில் குடியிருக்கும் லேட்.பெருமாள் கவுடர் குமாரர், இந்து சுமார் 75 வயதுள்ள திரு.ரெங்கசாமி என்ற பாண்டியர். |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், திருவள்ளுவர் தெருவில் குடியிருக்கும் லேட்.பெருமாள் கவுடர் மனைவி இந்து சுமார் 95 வயதுள்ள திருமதி.பெரியஜக்கம்மாள். |
| 3 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், திருவள்ளுவர் தெருவில் குடியிருக்கும் ரெங்கசாமி என்ற பாண்டியர் குமாரர் இந்து சுமார் 45 வயதுள்ள திருமலைராஜ் என்ற உமாசங்கர். |
| 4 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், திருவள்ளுவர் தெருவில் குடியிருக்கும் திருமலைராஜ் என்ற உமாசங்கர் மனைவி இந்து சுமார் 40 வயதுள்ள திருமதி.சாலினி. |
| 5 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், திருவள்ளுவர் தெருவில் குடியிருக்கும் ரெங்கசாமி என்ற பாண்டியன் குமாரர் இந்து சுமார் 35 வயதுள்ள கார்த்திகேயன். |

.. எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள்

மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் பதிலுரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 08.01.2025 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/– செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 28.04.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.A.காந்தன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**நிறைவேற்றாணை**

| | |
|---|---|
| 1. | இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

2025–ம் வருடம் ஜுன் மாதம் 04–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

IA 3/2025/in/OS 156/2022
EX ORDER
Date : 04.06.2025